தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண். 33 /பேரூ/2020

நாள் 13.10.2021

திரு. M.P. காளிங்கராஜு,
கோட்டூர் மலையாண்டிபட்டிணம்,
கோயம்புத்தூர் மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
கோட்டூர் பேரூராட்சி ... எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டிணம், எண்.6 உல்லாஸ் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.P. காளிங்ககாஜு என்பவரது 03.03.2020 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 6.3.2020ல் பெறப்பட்டு 33/2020என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை வட்டம், கோட்டூர் மலையாண்டிபட்டிணம், எண்.6 உல்லாஸ் நகர் என்ற முகவரியில் வசிக்கும் திரு. M.P. காளிங்ககாஜு என்பவர் தமது 3.3.2020 நாளிட்ட மனுவில் கோட்டூர் பேரூராட்சியில் மெயின் ரோட்டில் பெருமாள்சாமி கோயில் அருகில் உள்ள சாக்கடை மனித மலம் கலந்து அடைத்துவிடுகிறது என்றும், மேற்படி சாக்கடை பல ஆண்டுகாலமாக பேரூராட்சி துப்புரவு பணியாளர்களால் கையால் சுத்தம் செய்யப்படுகிறது என்றும், மேற்படி செயல் தொடர்ந்து நடைபெறுகிறது

என்றும் குறிப்பிட்டுள்ளார். செயல் அலுவலரின் கவனமின்மையால் இச்செயல் மாற்று ஏற்பாடு செய்யாமல் தொடரும் அவல நிலை உள்ளது என்றும், செயல் அலுவலர் இதை சீர்திருத்தம் செய்ய நடவடிக்கை எடுக்காமல் இருந்ததற்காக அவர் மீது நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரியும் மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர்களை 25.8.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 26.7.2021 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. முறையீட்டு மனுதாரர் திரு.M.P. காளிங்கராஜு 25.08.2021 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் (பொறுப்பு) 25.8.2021 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:-

"கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பிரதான சாலை பெருமாள்சாமி கோவில் அருகில் பெருமழைக்காலங்களில் அதிக அளவு நீர்வரத்து ஏற்படும் சமயத்தில் வடிகால் நீர் வெளியேற வழியில்லாமல் தேங்கி பிரதான சாலையில் வழிந்தோடிய நிலையில், நெடுஞ்சாலையின் அனுமதி பெற்று சாலையின் குறுக்கே 2 அடி விட்டமுள்ள குழாய் பதித்து பணிகள் முடிவுற்றது. தற்போது மேற்கண்ட சாலையில் கழிவுநீர் தேங்கவில்லை எனவும், மேலும் மேற்கண்ட வடிகாலில் அடைப்பு ஏதும் ஏற்படுவதில்லை என இம்மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன். இது தொடர்பான புகைப்படங்களையும் இம்மன்றத்தின் முன் இத்துடன் சமர்ப்பிக்கிறேன். மேலும், கோட்டூர் பேரூராட்சிக்குட்பட்ட எந்தவொரு வடிகாலிலும் குடியிருப்புகளிலிருந்து நேரடியாக மனிதக் கழிவுகள் வெளியேற்றப்படுவதில்லை எனவும் மேலும் கோட்டூர் பேரூராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கு மனித ஆற்றல் மூலம் மனிதக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடக்கூடாது என்று தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்பதை இம்மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் நேரடி விசாரணையின்போது வாக்குமூலத்துடன் அளித்துள்ள 25.8.2021 நாளிட்ட அறிக்கையில் மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கோட்டூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பிரதான சாலை பெருமாள்சாமி கோவில் அருகிலுள்ள வடிகால் 22.3.2021 அன்று நேரில் பார்வையிடப்பட்டதில், பெருமாள்சாமி கோவில் அருகிலுள்ள வடிகாலில் பெருமழைக்காலங்களில் அதிகளவு நீர்வரத்து ஏற்படும் சமயங்களில், இவ்வடிகால் நீர் எளிதில் வெளியேற வழியில்லாமல் தேங்கி பிரதான சாலையில் வழிந்தோடும் வகையில் இருந்ததை பொதுமக்களின் பொதுச்சுகாதார நலன் கருதி, வடிகால்நீர் எளிதில் வெளியேற செய்யும் வகையில் நெடுஞ்சாலை துறையின் அனுமதிபெற்று பிரதான சாலையின் குறுக்கே 2 அடி விட்டமுள்ள குழாய் பதித்து பிரதான வடிகாலுக்கு இணைப்பு ஏற்படுத்தும் பணி 24.5.2020-ல் பேரூராட்சி நிர்வாகத்தினால் செய்துமுடிக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். மேலும், புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பேரூராட்சிக்குட்பட்ட எந்தவொரு வடிகாலிலும் குடியிருப்புகளிலிருந்து நேரடியாக மனிதக்கழிவுகள் வெளியேற்றப்படுவதில்லை என்றும், பேரூராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு

யாதொரு மனிதக் கழிவுகளையும் மனித ஆற்றல் மூலம் அகற்றும் பணியில் ஈடுபடக்கூடாது என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

4. தற்போது கோட்டூர் பேரூராட்சியில் பெருமாள்சாமி கோவில் அருகிலுள்ள வடிகால் நீர் சீராக செல்லும் வகையில் பணி செய்து முடிக்கப்பட்டுள்ளது. தற்போது மழைக்காலங்களில் இவ்வடிகாலில் அடைப்புகள் ஏதும் ஏற்படுவதில்லை என்றும் கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இப்புகார் குறித்து பேரூராட்சியின் துப்புரவு மேற்பார்வையாளர் வடிகால் அடைப்புகள் சரிசெய்யப்பட்டுள்ளதற்கு அவரது கைபட எழுதி அளித்துள்ள 9.3.2021 நாளிட்ட கடிதம் மற்றும் வடிகால்நீர் எளிதில் வெளியேற செய்யும் வகையில் நெடுஞ்சாலை துறையின் அனுமதிபெற்று பிரதான சாலையின் குறுக்கே 2 அடி விட்டமுள்ள குழாய் பதித்து பிரதான வடிகாலுக்கு இணைப்பு ஏற்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டபோது எடுக்கப்பட்ட புகைப்படங்கள், பணிகள் முடிக்கப்பட்டபின் கோட்டூர் மெயின்ரோடு பெருமாள்கோவில் முன்புறம் வடிகால் சுத்தம் செய்யப்பட்ட பின்னர், பேரூராட்சி நிர்வாகத்தினர் நேரடி ஆய்வு மேற்கொண்டு வடிகாலின் நீர் தடையின்றி செல்வதை உறுதிசெய்து எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் மனிதக் கழிவுகளை கைகளால் அள்ளக்கூடாது என்று செயல் அலுவலர் மற்றும் பணியாளர்களால் எடுத்துக்கொள்ளப்பட்ட உறுதிமொழி புகைப்படம் ஆகியவற்றையும் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு, கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் வாக்குமூலம், அவரது அறிக்கை மற்றும் அறிக்கையுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர் தமது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள கோட்டூர் பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, பிரதான சாலை பெருமாள்சாமி கோவில் அருகிலுள்ள வடிகாலில் பெருமழைக்காலங்களில் அதிகளவு நீர்வரத்து ஏற்படும் சமயங்களில், இவ்வடிகால் நீர் எளிதில் வெளியேற வழியில்லாமல் தேங்கி பிரதான சாலையில் வழிந்தோடும் வகையில் இருந்ததை பொதுமக்களின் பொதுச்சுகாதார நலன் கருதி, வடிகால்நீர் எளிதில் வெளியேற செய்யும் வகையில் நெடுஞ்சாலை துறையின் அனுமதிபெற்று பிரதான சாலையின் குறுக்கே 2 அடி விட்டமுள்ள குழாய் பதித்து பிரதான வடிகாலுக்கு இணைப்பு ஏற்படுத்தும் பணி 24.5.2020–ல் பேரூராட்சி நிர்வாகத்தினால் செய்துமுடிக்கப்பட்டுள்ளது. மேலும், புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பேரூராட்சிக்குட்பட்ட எந்தவொரு வடிகாலிலும் குடியிருப்புகளிலிருந்து நேரடியாக மனிதக்கழிவுகள் வெளியேற்றப்படுவதில்லை என்றும், பேரூராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு யாதொரு மனிதக் கழிவுகளையும் மனித ஆற்றல் மூலம் அகற்றும் பணியில் ஈடுபடக்கூடாது என அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளதால், முறையீட்டு மனுதாரர் தமது 3.3.2020 நாளிட்ட புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

6. கோயம்புத்தூர் மாவட்டம், கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி நிர்வாகத்தினால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, கால்வாய் அடைப்புகள் சீரமைக்கப்பட்டு

தற்போது நல்ல நிலையில் உள்ளதாலும், பேரூராட்சியின் தூய்மைப் பணியாளர்களுக்கு யாதொரு மனிதக் கழிவுகளையும் மனித ஆற்றல் மூலம் அகற்றும் பணியில் ஈடுபடக்கூடாது என அறிவுரைகள் வழங்கப்பட்டு, அதற்கான உறுதிமொழியும் எடுக்கப்பட்டுள்ளதால், கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனுதாரரின் இப்புகார் மனு மீதான மேல்நடவடிக்கையினை இத்துடன் முடித்துவைக்கலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவுசெய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– XXXX

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

திரு. M.P. காளிங்கராஜு,
6, உல்லாஸ் நகர், கோட்டூர் மலையாண்டிபட்டிணம்,
ஆனைமலை வட்டம், கோயம்புத்தூர் மாவட்டம்–642 114

செயல் அலுவலர், கோட்டூர் சிறப்புநிலை பேரூராட்சி,
கோயம்புத்தூர் மாவட்டம். 642 114

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்